பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி! 51331 ★ தோற்றம்! 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 24 (9—11—72) வியாழன் — வெளியூர்: ஐப்பசி 25 (10—11—72) வெள்ளி [இதழ்: 121

நாடறியப்போ[கும்] நாகரீகம்

நிருபர்:—"ஊர்வலம் பெரிதாக இருக்குமா?"

புதுக் கட்சி மூலவர்:—"ஊர்வலம் எந்த அளவு இருக்கும் என்று இப்போது சொல்வது 'நாகரீகம்' அல்ல!"

அது சரி; ஊர்வலம் நடந்த பிறகுதானே உமது கட்சி கடைபிடிக்கும் 'அரசியல் நாகரிகம்' உலகத்துக்குத் தெரியும்!"

செய்தி விளக்கம்

கறுப்புப் பணம் வாங்குவதைக் கைவிட்ட 'நாணயஸ்தர்'

"நான் கறுப்புப் பணம் வாங்குகிறேன் என்று சிலர் பேசியிருக்கிறார்கள்.

"முன்பு கறுப்புப் பணம் வாங்கினேன்தான்; அந்தப் பணத்திற்குப் பிறகு கணக்குக் காட்டி—அதற்கான வரியையும் கட்டிவிட்டேன்; அதன் பின் நான் கறுப்புப் பணம் வாங்குவது இல்லை."

—மாஜி புரட்சி நடிகர் பேச்சு

★

"என்னைத் திருடன் என்கிறார்கள்: நான் முன்பு திருடியது உண்மை; ஆனால் நீதிமன்றத்தில் அதற்குரிய தண்டனையைப் பெற்று அனுபவித்துவிட்டேன்; அதன் பிறகு இப்போது நான் திருடுவது இல்லை."

—ஒரு மாஜி கைதி

கறுப்புப் பணம் வாங்குவது அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்படும் வரையில், புரட்சி நடிகர் கறுப்புப் பணம் வாங்கிக்கொண்டிருந்தார்; அதனைக் கண்டுபிடித்து விட்டார்கள்; 'நன்றாக மாட்டிக்கொண்டுவிட்டோம்—இனிப் பலிக்காது' என்று தெரிந்து கொண்ட பின், அதற்குரிய வரியையும் செலுத்திவிட்டார்.

'அதிகாரிகளின் கழுகுப் பார்வையிலிருந்து இனித் தப்ப முடியாது' என்பதால்தான், கறுப்புப் பணம் வாங்குவதைக் கைவிட்டார்!

அவருடைய வாக்குமூலத்திலிருந்து தெரியும் உண்மை இது தான்!

பலநாள் திருடன் ஒருநாள் அகப்பட்டான்—கைதானான்; நீதிமன்றத்திலே, திருடியதையும் ஒப்புக்கொண்டான்—அதற்குரிய தண்டனையும் கிடைத்தது; சிறையிலிருந்து வெளிவந்தான்; அன்று முதலே அவன் மீது போலீசுக்கு ஒரு கண் இருந்தது; தொடர்ந்து அவன் தனது தொழிலை நடத்த முடியுமா? எனவேதான், திருட்டுத் தொழிலைக் கைவிட்டானே யன்றி, 'திருடுவது நல்லதல்ல' என்று தானே உணர்ந்து திருந்தியவனல்லன்!

எம்.ஜி. இராமச்சந்திரன், தாம் திருந்திவிட்டதாகக் கூறுவதற்கும்—திருடன் தன் தொழிலை விட்டு விட்டதாகக் கூறுவதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

போலீசிடம் பிடிபடுவதற்கு முன்னரே திருடன்—தானாகத் திருட்டுத் தொழிலை விட்டுவிட்டு, 'நான் இதுநாள் வரையில் திருடிக் கொண்டிருந்தேன்; என்னை இதுவரையில் யாரும் பிடிக்கவில்லை; என்றாலும், நானே உணர்ந்த காரணத்தால், 'இனித் திருடுவதில்லை' என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்; திருடிய சொத்துக்களையெல்லாம் உரியவர்களிடம் ஒப்படைத்துவிடப் போகிறேன்' என்று அறிவித்து—அதன்படி நடந்துகொண்டான் என்றால், அவன் உள்ளபடியே சமுதாயத்தில் நல்ல மனிதனாக மாறியவன் என்று பொருள்; அவனை யாரும், 'திருடன்' என்று சொல்லமாட்டார்கள்!

அப்படி இல்லாமல், போலீசில் சிக்கிக்கொண்டு தண்டனை ஏற்ற காரணத்தால் திருட்டுத் தொழிலை விட்டவன் உண்மையாக மனம் மாறியவன் ஆகமாட்டான்!

வருமான வரி அதிகாரிகளிடம் சிக்கிவிட்ட காரணத்தால், வரி செலுத்திவிட்டுக் கறுப்புப் பணம் வாங்கும் வழக்கத்தைக் கைவிட்டு விட்டவர் 'நாணயஸ்தர்' ஆகமாட்டார்!

உங்கள் பாஷையிலேயே அமையட்டும் 'முஷக்க'ங்கள்!

"ஊர்வலத்தின்போது என்னென்ன 'கோஷம்' என்பதை நானே தெளிவாக வெளியிடப்படும்; அது அன்றி வேறு கோஷம் ஊர்வலத்தில் பயன்படுத்தக் கூடாது."

—புதுக் கட்சித் தலைவர் அறிக்கை

பரவாயில்லை; 'பாதை'யை மாற்றிக் கொண்டவுடனேயே 'பாஷை'யும் மாறிவிட்டது! 'முழக்கம்' — 'கோஷம்' ஆகிவிட்டது! அண்ணா வழிவந்தோர் முழக்கம்தான் இடுவார்களே தவிர, 'கோஷ'மிடமாட்டார்கள்!

அந்தக் 'கோஷங்'கள் என்னென்ன என்பதை இன்றே வெளியிட்டிருக்கக் கூடாதோ! 'பெரிய பெரிய திட்ட'ங்களையெல்லாம் நினைத்த மாத்திரத்திலேயே நிருபர்களிடம் வெளியிடும் நீர், 'கோஷங்'களை வெளியிட யோசனை ஏன்? கூட்டுத் தோழர்களைக் கேட்டுத்தான் முடிவு செய்ய வேண்டுமா?

'கோஷ'ப் பட்டியல் தயாரிக்கும்போது தப்பித் தவறியும் 'வாழ்க' என்ற சொல்லைப் போட்டுவிட வேண்டாம். அந்த நல்ல தமிழ்ச் சொல், தி. மு. கழகத்துக்கே உரியதாக இருக்கட்டும்; 'ஜே—ஜே' என்றே இனி கோஷமிடச் செய்யுங்கள்! 'ஒழிக' என்ற கோஷங்கள் மட்டும் நிறைய இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்!

உங்கள் சீட்டுகோடிகள், ஓடும் பஸ்களையும்—லாரிகளையும் நிறுத்தியும், சுவர்களிலும் எழுதினார்களே—அந்தக் கோஷங்களெல்லாம் தவறாமல் ஊர்வலத்திலும் ஒலிக்கும்படி செய்யுங்கள்! அப்பொழுதுதான் உங்களை யார் என்று நாட்டு மக்கள் அடையாளம் கண்டுகொள்வார்கள்!

தி. மு. க. பாணியிலேயே உங்கள் கோஷங்களும் இருந்தால், உங்களுக்கே உரிய 'தனித்தன்மை' கெட்டுவிடும்!

தனிப்பட்ட தலைவர்களுக்கு எதிராகவும்—குறிப்பாக முதல்வர் கலைஞருக்கு எதிராகவும் நிறைய கோஷங்கள் எழுப்புவதில் 'தோஷ'மில்லை; அதுவும் உங்களுக்கே உரிய 'தர'த்தில் அமையட்டும்! அப்போதுதான் முதல்வர்மீது மக்களுக்கு நல்ல வெறுப்பு ஏற்படும்—உங்கள்மீது நல்ல அனுதாபம் பிறக்கும்!

கல்யாணசுந்தரத்துக்கு கிடைத்திருக்கும் புதுப் பதவி!

"ஒன்பதாம் தேதி சென்னையில் சர்வ கட்சிக் கூட்டம் நடைபெறும் என்றும் அன்று எம். ஜி. ஆர். தனது எதிர்காலத் திட்டத்தை அறிவிப்பார் என்றும் கல்யாணசுந்தரம் தெரிவித்தார்."

—செய்தி

அந்த 'எதிர்காலத் திட்டம்' எப்படியிருக்குமோ—கம்யூனிஸ்டுகளுக்குத்தான வெளிச்சம்!

அதிருக்கட்டும்; கல்யாண சுந்தரம் எப்போது எம்.ஜி. ஆரின் 'அறிவிப்பாளர்' ஆனார்? அந்தக் கட்சிக்குக் கொள்கைபரப்புச் செயலாளர்கூட நியமிக்கப்பட்டுவிட்டாரே!

போகுமிடம் வெகு தூரமில்லை

நிருபர் கேள்வி:— "ஊர்வலம் செல்லும் நீளம் அதிகமாக இருக்கிறதே?"

ஒட்டுக் காங்கிரசுத் தலைவர் பதில்:—"நாம் போகும் பயணம் ரொம்ப தூரம்; அதற்கு இது எடுத்துக்காட்டு."

ஆமாம்—ஆமாம்; வந்த வழியை விட்டு விலகி ரொம்பத் தூரம்தான் போய்க்கொண்டிருக்கிறீர்! நீர் போய்ச் சேரவிருக்கும் இடமும் எது என்று தமிழ் மக்களுக்குப் புரிகிறது!

'போகுமிடம் வெகு தூரமில்லை! வாராய்—வாராய்' என்று உம்மை அழைத்திருப்பவர்கள் யார் என்பதும் மக்களுக்குத் தெரியும்!

'ஜாடை' காட்டிவிட்டார் 'வாத்தியார்'

"கூட்டத்தின் ஒழுங்கைச் சீர்குலைக்க—நம் நோக்கத்தைக் கெடுக்க—நம்மைப் பழிச்சொல்லுக்கு ஆளாக்க யாராவது ஐந்தாம் படையினர் ஊர்வலத்தில் செயல்பட முனைந்தால், நாமே அப்படிப்பட்டவர்களைப் பிடித்துப் போலீசில் ஒப்படைக்க வேண்டும்.

"இப்படிப்பட்ட சூது மதியினர் இப்படியுங்கூட முனையலாம் என்று தோன்றுவதால், முன்னெச்சரிக்கையாக இதைச் சொல்லுகிறேன்."

—புதுக் கட்சி ஸ்தாபகரின் ஊர்வல அறிக்கை.

புரிகிறது 'வாத்தியாரே'—புரிகிறது! சீட்டுகோடிகளுக்கு நீர் காட்டும் ஜாடை' புரிகிறது!

ஊர்வலத்தில் எப்படி நடந்து கொள்ளப் போகிறார்கள்—நடந்துகொள்ள வேண்டும் என்பதை ரொம்ப 'நாசுக்காக'த் தெரிவித்துவிட்டீரே—அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்!

நீர் சொல்லும் 'ஐந்தாம் படை' யார் என்பதும் புரியும்—உம்மை விடப் போலீசாருக்கும் நன்றாகப் புரியும்! உமது இரகசியத் திட்டம் என்ன என்பது மத்தியப் போலீசுக்கு எங்கே புரியப் போகிறது என்று நினைக்கிறீர்களா?

நீர் முன்னெச்சரிக்கையா புரிகிறீர்—நடத்தவிருக்கும் திருவிளையாடல்களுக்கு முன் பாதுகாப்பு அல்லவா தேடிக்கொள்[கிறீர்]—அறிக்கை மூலம்!

மக்களவை கூட்டம்

நவ. 13-ல் தொடங்குகிறது

புதுடில்லி, நவ. 8—

நவம்பர் 13-ம் நாளன்று மக்களவைக் கூட்டம் தொடங்குகிறது; ஐந்து வாரக் காலத்திற்கு இந்தக் கூட்டத் தொடர் நடைபெறும்.

இந்தக் கூட்டத் தொடரில் 10 அரசாங்க மசோதாக்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இதைத் தவிர, ஏற்கனவே, முடிவுறாமல் இருக்கும் நான்கு மசோதாக்கள்மீதும் விவாதம் நடைபெறும்.

புளுகா[ண்டித்] திலகத்தின் புதிய 'ஸ்டண்ட்'

"ஒருவேளை நான் கைது செய்யப்பட்டால், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு தீக்குளிக்கப் போவதாகப் பல நண்பர்கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள்."

—புதுக் கட்சி ஸ்தாப[கர்]

செய்பவர்கள் சொல்லமாட்டார்கள்—சொல்லுபவர்கள் செய்யமாட்டார்கள்!

அப்படிக் கடிதம் எழுதியிருப்பவர்கள் யார் யார்?—அந்தக் கடிதத்தையாவது பத்திரிகையாளரிடம் காட்டினாரா?

'இந்த மாதிரி செய்யுங்கள்' என்று அப்பாவிகளைத் தூண்டிவிடும் தந்திரம் தானே இது!

அறிக்கை மன்னரே—உமது அற்பத்தனமான ஆசையை இப்படியா தீர்த்துக்கொள்ள வேண்டும்? நீர் சொல்லுவது உண்மை என்று நினைத்துக் கொண்டு அப்பாவி ரசிகர்கள் சிலர் இந்த முயற்சியிலும் ஈடுபட்டுவிடப் போகிறார்கள்!

ஆனால் அப்படி ஒன்றும் நடந்துவிடாது; என்னதான் ரசிகர்களாக இருந்தாலும், தீக்குளிக்கத் துணிந்துவிடமாட்டார்கள்; அப்படிச் செய்வதும் முறையல்ல; அது கூடாது—ஆகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"எனக்காகத் தீக்குளிக்கவும் இத்தனை பேர் தயாராக இருந்தார்கள்; நான் கேட்டுக் கொண்டதன்பேரில் அவர்களெல்லாம் அந்தத் திட்டத்தை கைவிட்டார்கள்" என்று பின்னால் சொல்வதற்காகவே இப்படி ஒரு 'ஸ்டண்ட்' அடிக்கிறீரா?

கூடவேண்டியவர்கள் கூடுகிறார்கள்

'இராஜ தந்திரி'களே—நடக்கட்டும் 'மந்திராலோசனை'

நவம்பர் 10-ந் தேதி நடக்க இருக்கும் ஊர்வலத்தைப் பற்றியும்—அதேது நடத்தப் போகும் அர்த்தால் பற்றியும் எம். ஜி. இராமச்சந்திரன் இன்று கம்யூனிஸ்டுத் 'தலைவர் கல்யாணசுந்தரத்துடனும், மற்றக் கட்சித் தலைவர்களுடனும் ஆலோசனை நடத்துகிறாராம்.

மற்றக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினாலும் நடத்தாவிட்டாலும், கல்யாண சுந்தரத்துடன் ஆலோசனை நடத்தவேண்டியது 'ரொம்ப முக்கியம்'. 'அவர்' புண்ணியத்திலே 'இவர்' எண்ணமும், 'இவர்' புண்ணியத்தாலே 'அவர்' எண்ணமும்தானே ஈடேறப் போகிறது!

சந்தடியோடு சாக்காக, ஊர்வல வெற்றியில் எங்களுக்கும் பங்கு உண்டு' என்று காட்டிக் கொள்ள மற்றக் கட்சித் தலைவர்களும் போய் [...] இருவருடன் ஒட்டிக்கொள்ளலாம்! உதிரிகள்—ஒட்டுப்புல்களுக்கெல்லாம்கூட நல்ல சான்ஸ்! குறைந்த காலத்தில் செலவே இல்லாமல் நல்ல விளம்பரம் கிடைக்கும்! ஆளுக்கேற்ப ஆதாயமும் உண்டு!

கழகத்திலிருந்து எம். ஜி. ஆர். விலகியது ஏன்? -- அமைச்சர் செ. மாதவன் வெளியிடும் தகவல்கள்

வரிகள் பல விதித்து மிரட்டியது டில்லி

நிபந்தனைகள் கண்டு நிலைகுலைந்தார் -- ஆணைகளுக்கு அடிபணிந்தார்

மாற்றார் காட்டிய ஆதாரங்களை நாம் நம்ப மறுத்தோம்

இன்று கழகத்திற்கு எதிராக அணிவகுக்க முனைகிறார் --- தமிழ்ச் சமுதாயம் அவருக்குத் தக்க பதில் அளிக்கும்

சென்னை, நவ. 9—

"எம். ஜி. ஆர். அவர்களே -- நீங்கள் டெல்லிக்குச் செலுத்த வேண்டிய வரிகள் பற்றிப் புள்ளிவிவரங்களுடனும் -- ஆதாரத்துடனும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்; அவற்றிற்கு நீங்கள் எழுதிய கடிதங்களையும் -- உங்களுக்கு வந்த அறிக்கைகளையும் காண்பித்தார்; நீங்கள் செய்திருக்கின்ற ஒவ்வொன்றையும் -- அத்தனையையும் என்னிடத்திலே சொன்னார்; அவைகளைச் சிறிதளவும் நான் நம்பவில்லை; ஆனால் நீங்களோ, 'எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள்' என்று கூறி எங்கள்மீது ஊழல் புகார்களைச் சொல்கிறீர்கள் -- குற்றச்சாட்டு வேறு சுமத்துகிறீர்கள்!

"இதிலுள்ள வேறுபாட்டைப் பார்த்தீர்களா? உங்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்திலே தலைவராக நாங்கள் ஏற்றுக்கொண்ட காரணத்தினால், உங்கள்மீது எத்தனை குற்றச்சாட்டைச் சொன்னாலும் -- எத்தனை ஆதாரங்களைக் காட்டினாலும் -- எத்தனைப் புள்ளிவிவரங்களைச் சொன்னாலும் அவைகளை ஒப்ப மறுத்தார்கள்; அதுமட்டுமா -- உங்களைத் தெய்வமாகவும் மதித்தார்கள்; ஆனால், நீங்கள் 'திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் -- தொண்டர்கள் அத்தனை பேரும் இலஞ்சத்திலே உருவானவர்கள் -- ஊழல் மிகுந்தவர்கள்; இந்தக் கட்சியை அழித்தே தீருவேன்' என்று புரட்சிக் கொடி ஏந்தி வந்துவிட்டீர்கள்; அந்தப் புரட்சிக் கொடியைச் சந்திப்பதற்காகத் தமிழ்ச் சமுதாயம் தயாராக இருக்கிறது!"

என்று சுட்ட -- தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள், சென்னை 34-வது வட்டத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்; தி. மு. கழகத்திலிருந்து எம். ஜி. ஆர். விலகித் தனிக் கட்சித் தொடங்கியதற்கான காரணங்களை விளக்குகையில், பல்வேறு தகவல்களைத் தெரிவித்தார்; அவை வருமாறு:—

சில மாதங்களுக்கு முன்னாலே ஒரு பெரிய தலைவர்—காங்கிரசுக் கட்சித் தலைவர்—என்னைச் சந்தித்தார்; '6 மாதத்திலே ஒரு பெரிய அதிசயம் தமிழ்நாட்டிலே நடக்கப் போகிறது' என்று ஒரு வெடிகுண்டை வீசினார்; 'என்ன' என்று கேட்டேன்; 'உங்களுடைய புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களை எப்படியாவது மிரட்டிக் கடைசி ஆயுதமாக -- கடைசி துருப்புச் சீட்டாக -- உங்களுக்கு எதிராக நாங்கள் பயன்படுத்தப் போகிறோம்' என்றார்; என்னாலே நம்ப முடியவில்லை; 'எங்கள் தலைவரை நீங்கள் எப்படி மிரட்ட முடியும்' என்று ஆத்திரத்தோடு கேட்டேன்; 'பயங்கரமாக வரிமேல் வரி போட்டு அவரைக் கொடுமைப்படுத்தப் போகிறோம்' என்று அவர் என்னிடத்திலே சொன்னார்; 'ஆதாரம் இருக்கிறதா' என்று கேட்டேன்; '1969-ம் ஆண்டே அந்த ஆயுதத்தை மிரட்டுவதற்காகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டோம்; 1960-61-ம் ஆண்டிலிருந்து அவர் செலுத்த வேண்டியிருந்த வரியை மறுபரிசீலனை செய்யத் தொடங்கிவிட்டோம்; என்று சொல்லி -- அதன் புள்ளிவிவரத்தைக் காட்டத் தொடங்கினார்; அப்போதும் நான் நம்பவில்லை; 'ஏனையா -- இப்படிக் கொடுமையைச் செய்யலாமா' என்று அவரிடத்திலே நான் கேட்டேன்; அதற்கு அவர், 'உங்கள் புரட்சி நடிகர் மட்டும் கொடுமையைச் செய்யலாமா' என்று கேட்டார்; 'என்ன' என்று கேட்டேன்.

"1962-63-ல் அவருக்கு ரூ. 33,304 வருமானம்; 1967-ல் தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் ரூ 7,77,219 ஆண்டு வருமானம்; இத்தனை மடங்கு எப்படிக் கூடியது என்று டில்லியில் இருப்பவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது; ஆகவே மிரட்டுகிறார்கள்' என்றார்; 'நீங்கள் எத்தனை வரிகளைப் போட்டாலும் சரி -- எங்களுடைய புரட்சி நடிகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையிலிருந்து சிறிதளவுகூட அசையவேமாட்டார்; உங்களால் அவரை அசைக்க முடியாது' என்று சொன்னேன்.

ஆனால் அவர் மீண்டும், '1960-61-ம் ஆண்டிலிருந்து 1970-71 வரையிலான 11 ஆண்டுக்கால வரியை 1969-ம் ஆண்டிலிருந்து 1971-ம் ஆண்டுவரையிலான மூன்று ஆண்டுக் கணக்கை மறுபரிசீலனை செய்து ஒவ்வொரு நாளும் ஒரு தாக்கீது எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அனுப்பப்பட்டது; அதனுடைய விளைவு என்ன தெரியுமா -- நான்கு ஆண்டிலே அவர் வரியாகக் கட்டவேண்டியது என்று சொல்லி ரூ. 17,96,402 அளவுக்கு அவரை வரி கட்ட வைத்தது மத்திய அரசு' என்றார்: அப்போதும் நான் நம்பவில்லை -- புரட்சித் தலைவர் தடுமாறுவார் என்று; எனவே, இதனையும் நான் நம்ப மறுத்துவிட்டேன்.

"இன்னுமா நம்ப மறுக்கிறாய்; இந்தத் தாக்கீதைப் பார்; 21—1—1970-ம் ஆண்டில் பிறப்பித்திருக்கின்றோம்; அந்தத் தாக்கீதுப்படி ரூ. 16,30,073 எம். ஜி. ஆர். வரியாக செலுத்த வேண்டும்; அப்படிச் செலுத்தும்போது ஒரு படத்திலே நடித்தால் தன்னுடைய சொந்தச் செலவுக்காக ஒரு படம் ஒன்றுக்கு ரூ. 75,000 வைத்துக்கொண்டு மீதி அனைத்தையும் வரி பாக்கிக்காகச் செலுத்த வேண்டும்; எப்படி எங்கள் மிரட்டல்" என்று ஆணவத்தோடு அந்தக் காங்கிரசுக்காரர் கேட்டார்; மீண்டும் அவர், 'இந்த வரிப் பாக்கிக்காகக் குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 இலட்சம் வரி கட்ட வேண்டும்; எப்படி எங்கள் மிரட்டல்' என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

"இது மட்டுமா? எந்தச் சொத்தையாவது எம். ஜி. ஆர். விற்பாரானால் அந்தப் பணத்தை இந்த வரிப் பாக்கிக்குத்தான் நாங்கள் எடுத்துக் கொள்வோம்; அடுத்த நிபந்தனை பார்த்தாயா?" என்றார் அந்தக் காங்கிரசுக்காரர்!

"எம். ஜி. ஆர். சொத்துக்களின்மீது கடன் எழுப்பினாலும், அந்தக் கடன் முழுவதையும் வரிப் பாக்கிக்குக் கட்டி தீரவேண்டும்; பார்த்தாயா எங்கள் மிரட்டலை" என்றும் எக்களித்தார் அவர்!

அந்த நிபந்தனையோடு விட்டார்களா? 'இதற்கு மேலே வட்டியும் தொடர்ந்து செலுத்திக் கொண்டிருக்க வேண்டும்; ஒவ்வொரு ஆண்டும் புதிய வரியைச் செலுத்திக் கொண்டிருக்க வேண்டும்' என்றும் ஆணையிட்டார்கள்.

அதோடு விட்டார்களா -- 'எம். ஜி. ஆர். அவர்களே -- உங்களுக்கு இருக்கின்ற சொத்துக்கள் அனைத்திற்கும் சொந்தமான பத்திரங்களை வருமான வரித் துறையிடம் ஒப்படைத்துவிட வேண்டும்' என்றார்கள்; எவ்வளவு பயங்கரமான நிபந்தனைகள? புரட்சித் தலைவரே -- உங்களுக்குப் போட்ட நிபந்தனைகளைக் கேட்டு உண்மையிலேயே நான் அன்றைக்குப் பயந்து போனேன்!

"இந்த நிபந்தனைகளுக்குக் கட்டுப்படாவிட்டால் -- எம். ஜி. ஆர். அவர்களே -- உங்களுக்கு இன்னொரு தாக்கீது; உங்கள் சொத்து முழுவதும் ஜப்தி செய்யப்பட்டு இந்த வரிப் பாக்கி வசூலிக்கப்படும்" என்று மிரட்டியதாகவும் அந்தக் காங்கிரசுக்காரர் சொன்னார்; நான் நம்பினேனா -- இல்லை; ஆனால் அவர் விடவில்லை.

24—1—70-ல் எம்.ஜி.ஆர்., ஒரு தாக்கீதுக்குப் பதில் தருகின்றார்; அதிலே, 'நான், உங்களுடைய நிபந்தனைகளையெல்லாம் ஏற்றுக் கொள்கிறேன்; எப்படியாவது வரியைக் கட்டிவிடுகிறேன்' என்று பணிந்து சொன்னார்.

"ஏனையா -- அவர் இவ்வளவு [illegible] பணிந்து சொல்கின்றாரே -- ஏற்றுக்கொள்ள[illegible]?" என்று நான், அந்தக் காங்கிரசுக்காரரிடம் கேட்டேன்; அவர் சிரித்தார்; இன்னொரு தாக்கீதைக் காட்டி, 'பார் -- உங்களுடைய எம்.ஜி.ஆர். எங்களுடைய காலடியில் விழுகின்ற வரையில் -- திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிப்பதற்காக முன்வரும் வரையில் நாங்கள் அவரை விடப்போவதில்லை' என்றார்.

3—8—71-ந் தேதி இன்னொரு தாக்கீது எம்.ஜி.ஆரை நோக்கிப் போகிறது; -- 'ரூ. 1,12,160-ஐ இன்னும் 12 நாட்களுக்குள் நீங்கள் கட்டாவிட்டால் ஜப்தி உங்களைத் தொடர்ந்து வரும்; உங்களுக்குக் கொடுத்த தவணைகள் எல்லாம் தூக்கி எறியப்படும் -- ரத்து செய்யப்படும்; உடனடியாக பாக்கிகள் வசூலிக்கப்படும்' என்று மிரட்டியிருக்கிறார்கள்; இதனையும் நான் நம்பவில்லை; ஆனால் அந்தக் காங்கிரசுக்காரர் விடவில்லை; 'இதோ பார் -- எம்.ஜி.ஆரின் பதில்' என்று இன்னொரு நகலைக் காண்பித்தார்.

"எனக்கும் பணத்திற்குச் சிரமமாக இருக்கிறது; கடன் வாங்கித்தான் அந்தப் பாக்கியைக் கட்ட வேண்டும்; தவணை முறையை ரத்து செய்துவிடாதீர்கள்; எப்படியாவது நான் கட்டிவிடுகிறேன்' என்று 18-9-71-ல் வருத்தத்தோடு எம்.ஜி.ஆர். எழுதியிருக்கிறார்.

"இதற்குப் பிறகாவது அவரை விட்டுவிடக் கூடாதா?" என்று அந்தக் காங்கிரசுக்காரிடத்திலே கேட்டேன்; அவர் திமிராகப் பதில் சொன்னார்—"விட்டுவிடுவோமா? இதோ பார் இன்னொரு தாக்கீது -- 2—10—71-ல் எழுதியது; 'நீங்கள் பதில் எழுதாததால் தவணை முறையில் கட்ட வாய்ப்புக் கொடுத்திருந்ததை ரத்து செய்கின்றோம்; என்று எழுதியிருக்கிறோம்; உங்களுடைய எம்.ஜி.ஆரை மிரட்டுவதற்காக எவ்வளவு பெரிய ஆயுதத்தைக் கையில் வைத்திருக்கிறோம் -- பார்த்தீர்களா?" என்றும் அவர் சொன்னார்.

17—12—71-ந் தேதி மறுபடியும் ஒரு தாக்கீது -- புதிய நிபந்தனைகளைப் போட்டிருந்தனர்; 'மூன்றே மாதத்தில் ரூ 4 இலட்சம் பாக்கியைக் கட்டாவிட்டால்...?' என்று கேள்விக் குறி எழுப்பியிருந்தார்கள்; மேலும், 'ஒவ்வோர் ஆண்டும் குறைந்தபட்சம் ரூ. 1 இலட்சமாக -- ரூ. 4 இலட்சத்தைப் பாக்கிக்காகக் கட்டாவிட்டால்...?' என்று மிரட்டியிருந்தார்கள்; அதுமட்டுமா?—'ஒவ்வோர் ஆண்டும் நீங்கள் கட்டவேண்டிய புதிய வரியை உடனடியாகக் கட்டாவிட்டால் மறுபடியும் ஜப்திவரும்; எல்லா பாக்கிகளும் வசூலிக்கப்படும்' என்றும் குறிப்பிட்டிருந்தனர்.

"ஏனப்பா இந்தக் கொடுமை; அவர் வேண்டுகோளை பரிசீலிக்கக் கூடாதா?" என்று கேட்டேன்; 'நாங்கள் ஒப்புக்கொள்வோமா? எங்கள் ஆட்சியினுடைய பலத்தைப் பார் -- எங்களுடைய ஆயுதத்தின் வலிமையைப் பார்' என்றார் அந்தக் காங்கிரசுக்காரர்!

21—1—72-ந் தேதி மறுபடியும் ஒரு தாக்கீது; -- 'உடனே ரூ. 1 இலட்சம் கட்டவேண்டும்; தவணைப்படி கட்டாவிட்டால் ஜப்தி வரும் -- உங்களுடைய சொத்துக்களுக்கு ஜப்தி வரும்' என்று மீண்டும் மிரட்டியிருந்தனர்.

13—2—72-ந் தேதி கடைசிக் கட்டம்; மறுபடியும் ஒரு தாக்கீது; -- 'வருமான வரிச் சட்டம் 221-வது பிரிவின்படி நீங்கள் நிபந்தனைகளை மீறிய காரணத்தால் ஏன் உங்களுக்கு தண்டனை கொடுக்கக் கூடாது' என்று தாக்கீது (ஷோ காஸ் நோட்டீசு) அனுப்பப்பட்டது.

"இது என்ன கொடுமை அய்யா?" என்று அந்த காங்கிரசுக்காரரைப் பார்த்துக் கேட்டேன்; 'அதோடு மட்டுமா நாங்கள் விட்டுவிட்டோம்' என்றுகூறி அவர் மேலும் சில தகவல்களைத் தெரிவித்தார்.

"இந்த 'ஷோ காஸ்' நோட்டீசிற்கு எம். ஜி. ஆர். பதில் தரவில்லை; மறுபடியும் ஓர் உத்தரவு 23—2—72-ந் தேதியிட்டு; அந்த உத்தரவுப்படி, ரூ. 10,95,340-ஐ நீங்கள் கட்டாவிட்டால் அதற்காக ரூ. 2,000 அபராதம்" என்று மிரட்டினார்கள்.

எதிர்க்கட்சிக்காரர்கள் உங்களை (எம். ஜி. ஆர்.) மிரட்டியதாக என்னிடம் சொல்லிக் காண்பித்தார்கள்; எனினும் நான் நம்பினேனா -- இந்தப் பாழும் மனம் நம்பியதா? திராவிட முன்னேற்றக் கழகத் தனிப் பெரும் தலைவராக உங்களை எங்களுடைய உள்ளத்திலே ஏற்றிருந்த காரணத்தாலே நான் நம்ப மறுத்தேன்; உங்களை நாங்கள் மதிக்கின்ற காரணத்தாலே எங்கள் உள்ளம் நம்ப மறுத்தது!

எம். ஜி. ஆர். அவர்களே -- நீங்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றீர்கள் -- மத்திய அரசாங்கத்தை எதிர்த்து; அதையும் அவர் என்னிடம் காண்பித்தார்; 1972-ம் ஆண்டில் 486-வது ரிட் நெம்பரில் நீங்கள் உயர் நீதிமன்றத்திற்கு சென்றீர்கள் -- வருமான வரி இலாகாவை எதிர்த்து; எனக்கு ஒரே மகிழ்ச்சி -- 'பார்த்தீர்களா -- நீங்கள் கொடுமைப்படுத்தினாலும் -- ரூ. 29 இலட்சத்திற்கு வரி கட்ட வேண்டும் என்று மிரட்டினாலும் -- எங்களுடைய எம். ஜி. ஆர். பயப்படவில்லை; நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டார்' என்று நான் ஆணவத்தோடு அந்தக் காங்கிரசுக்காரருக்குப் பதில் சொன்னேன்.

ஆனால் சில நாட்களிலே அந்த 'ரிட்' மனு திரும்பப் பெறப்பட்டது. எம். ஜி. ஆர். அவர்களே -- என்ன நடந்தது? உங்களுடைய வீரம் என்ன ஆயிற்று? ரூ. 29 இலட்சத்திற்கான வரியைக் கண்டு நீங்கள் பயந்துவிட்டீர்களா? 'ஜப்தி' என்ற மிரட்டலைக் கண்டு பயந்துவிட்டீர்களா? என்னாலே இன்றைக்கும் இதனை நம்ப முடியவில்லை.

நீங்கள் உயர் நீதிமன்றத்தில் வாதாடி இருக்கிறீர்கள்; வழக்கைத் திரும்பப் பெற்றதற்குப் பின்னாலே என்ன ஆயிற்று? இதுபற்றி எங்களுக்கு இதுவரையில் ஏதும் தெரியவில்லை; புதுக் கட்சி வந்தது -- அது மட்டும்தான் எங்களுக்குத் தெரிகிறது!"

கணக்குக் கேட்பதற்காக அல்ல நடவடிக்கை -- கழகத்தைக் காப்பாற்றவே சஸ்பெண்டு செய்தோம்

'வரவு -- செலவுக் கணக்குக் காட்டத் தவறாத ஒரே கட்சி தி. மு. க.' --- பொதுச்செயலாளர் நாவலர் விளக்கம்

சென்னை, நவ. 8—

"தி. மு. கழகத்திலிருந்து எம்.ஜி.ஆரை விலக்கிவைக்கப் பட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது – உண்மை ஒன்றை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்; கணக்குக் கேட்டார் என்பதற்காகக் கழகத்தைவிட்டு அவரை விலக்கி வைக்கவில்லை; கழகக் கட்டுப்பாட்டை மீறினார் என்பதற்காகத்தான் அவர்மீது நடவடிக்கை எடுத்து—அவரைக் கழகத்திலிருந்து விலக்கி வைத்தோமே தவிர, கணக்குக் கேட்டார் என்பதனால் அல்ல!

ஒரு தனி மனிதரைவிட 15 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட கழகத்தைக் காப்பாற்ற வேண்டிய கட்டம் வந்தபோதுதான், நாங்கள் அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் வந்தது.

'எந்தக் கூட்டம் நடந்தாலும், கூட்டம் நடந்து முடிந்தவுடன், இவ்வளவு வந்தது – செலவுபோக இவ்வளவு மிச்சம் என்று சொன்ன ஒரே கட்சி தி. மு. கழகம்தான்; வேறு எந்தக் கட்சி இம்மாதிரி சொல்லியிருக்கிறது"

என்று தி. மு. கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுட்டிக்காட்டி வினவினார்.

சென்னை 34-வது வட்டம் தி. மு. கழகச் சார்பில் -- திரு. அ. செல்வராசன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தொழில் அமைச்சர் செ. மாதவன், நாடாளுமன்ற உறுப்பினர் சி. டி. தண்டபாணி, நீலநாராயணன் எம்.எல்.சி., வி. எஸ். கோவிந்தராசன், டி. கே. கபாலி, ஆர். டி. சபாபதி, அ. சுப்பிரமணி எம்.சி., மற்றும் பலர் பேசினர்.

இறுதியில் நாவலர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

இன்றைக்கு நாமெல்லாம் வருந்தத்தக்க வகையில் கழகத்திற்குச் சோதனை ஏற்பட்டிருக்கிறது; சோதனை என்பது எல்லா இடத்திலும் வரும் – [illegible]டுக்கு வீடு சோதனைவரும் [illegible]டிற்குக்கூடச் சோதனை வரும்; சோதனைகளை எல்லாம் ஏற்று ஏற்று – அவற்றிலிருந்து முன்னேறியதுதான் தி. மு. கழகம்!

1944-ல் ஒரு சோதனை ஏற்பட்டது; 1949-ல் மற்றொரு சோதனைக் கட்டம் ஏற்பட்டது; 1961-ல் மீண்டும் ஒரு சோதனைக் கட்டம் வந்தது.

உயிருக்கு உயிரான திராவிட நாடு கொள்கையைத் தி. மு. கழகம் கைவிட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்று -- அதற்கான காரண காரியங்களை அண்ணா அவர்கள் விளக்கிச் சொன்ன நேரத்திலேயே தி. மு. கழகம் அழியாதபோது, இப்போது எம்.ஜி.ஆரை இழந்ததனாலா இந்தக் கழகம் அழிந்துவிடப் போகிறது!

நேர்மை அடிப்படையில்—நாணயத்தின் அடிப்படையில்—உண்மையின் அடிப்படையில் இந்த நாட்டை வாழ வைக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பினர்; அறிவுத் திறனால் -- ஆற்றல் திறனால் வளர்க்கப்பட்ட இந்தக் கழகத்தைக் கட்டிக் காக்கும் [illegible] பணியில் நாமெல்லோரும் ஈடுபட்டோம்; நாட்டு மக்களின் உள்ளத்தை ஈர்க்கத்தக்க அளவுக்குச் செயலாற்றி வளர்ந்தோம்!

25 ஆண்டுக் காலமாக மாற்றார்கள் நம்மீது சொல்லாத குற்றச்சாட்டுக்கள் இல்லை; நம்மைக் குறை கூறாத தலைவர்களும் இல்லை!

பேச்சுத் திறமை கொண்டவர்கள் -- வாதத் திறமை கொண்டவர்கள் எவ்வளவோ குற்றச்சாட்டுக்களை நம்மீது எடுத்துச் சொல்லியும், மக்கள் மன்றத்தின் தீர்ப்பு எந்த அளவுக்குக் கழகத்தின் பக்கம் இருந்துவந்தது -- வருகின்றது என்பதை நன்கு அறிவீர்கள்.

எம்.ஜி.ஆர். வருமான வரியினால் எவ்வளவு சிரமத்திற்கு உள்ளாக நேரிட்டது என்பது குறித்து அமைச்சர் மாதவன் இங்கே சுட்டிக் காட்டினார்.

வருமான வரியின் தொல்லையிலிருந்து மீளமுடியாத நிலை வந்தபோது, 'தி. மு. க.-விலிருந்து விலகி இந்திரா காந்தி அம்மையாருக்குச் சார்பாக நடந்துகொண்டால் இந்தத் தொல்லையிலிருந்து நீங்க முடியும்' என்ற கட்டம் வந்தபோதுதான் கழகத்தைவிட்டு அவர் வெளியேறியிருக்கிறார்.

கழகத்திலிருந்து வெளியேற்றப் பட வேண்டும் என்று கருதியே கழகக் கட்டுப்பாட்டை மீறியிருக்கிறார்!

1970, 1971, 1972 ஆகிய மூன்றாண்டுக் கணக்கை எம். ஜி. ஆர். இதுவரையிலும் சட்டமன்றத்தில் வைக்கவில்லை; இது குறித்துப் பத்திரிகை நிருபர் ஒருவர் அவரைக் கேட்டிருக்கிறார்; அதற்கு அவர், 'நோட்டீசு அனுப்பியிருந்தால் கணக்கை வைத்திருப்பேன்' என்று சொல்லியிருக்கிறார்.

மார்ச் 31-ந் தேதி கணக்கை செப். 30-க்குள் வைக்கவேண்டும் என்பது சட்டம்; 'கணக்கைச் சட்டமன்றத்தில் வைக்க வேண்டும்' என்று 13 நோட்டீசுகள் அவருக்கும் போய் இருக்கின்றன.

கணக்கு வைக்காத அந்த யோக்கியர், நாங்கள் கணக்கு தராத மாதிரி பேசுகிறார்!

"மற்றவர்கள் எல்லாம் சொத்தை மனைவியின் பேரில் எழுதிவைத்து விட்டார்கள்; நான்தான் ரொம்ப யோக்கியன்" என்று சொல்லுகின்ற அவருடைய கணக்கைப் பார்ப்போம்.

அவர் கொடுத்துள்ள கணக்கில், 'இராமாவரத்தில் தோட்டம் இருக்கிறது; அது எனக்கும் -- எம். ஜி. சக்கரபாணிக்கும் பாதிப் பங்கு என்று எழுதியிருக்கிறார்.

கேரளத்தில் வீடு இருக்கிறது; அதிலும் பாதிப் பங்கு எம். ஜி. சக்கரபாணிக்கு உண்டு என்று எழுதி வைத்திருக்கிறார்!

சம்பாதித்தது யார்? எம். ஜி. ஆரா -- எம். ஜி. சக்கரபாணியா?

கலைஞரும் -- நானும் கணக்கைக் கொடுத்திருக்கிறோம் (கணக்குகளைப் படிக்கிறார்); ஆனால் கணக்கு வைக்காத அவர், கணக்கு வைத்த எங்களைப் பார்த்து கணக்குக் கேட்கிறார்!

எவ்வளவோ பிரச்சினைப் பற்றிப் பேச வேண்டிய இந்த நேரத்தில் -- அரசு சாதித்துள்ள சாதனைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய இந்த நேரத்தில் -- இவைகளைப் பற்றி பேச வேண்டிய நிலைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கிறார்!

ஊழல் குற்றத்தை மக்கள் மன்றத்தில்தான் எடுத்துச்சொல்ல வேண்டும்; மக்கள் மன்றத்தை மதிக்காமல் குடியரசுத் தலைவரிடம் ஏன் போக வேண்டும்?"

திலகமே--- வேண்டாம் கலகம்!

"மக்கள் படும் தொல்லையை எடுத்துக் காட்டி—மக்களின் குமுறலை வெளிப்படுத்தி — 10-ஆம் தேதி அன்று ஊர்வலமாக கவர்னர் மாளிகைக்குச் சென்று 'வழி என்ன?' என்று கேட்கப்போகிறோம்; திருப்திகரமான பதில் கிடைக்காவிட்டால் அர்த்தால் நடத்துவோம்."

—புதுக் கட்சி ஸ்தாபகர்

மக்கள் திலகமே -- நீர், 'மக்கள் திலகம்' என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டதனாலேயே, நீர்தான் மக்கள்—மக்கள்தான் நீர் என்ற நினைப்பா?

எந்த மக்கள் -- எங்கே என்ன தொல்லைகளை ஏற்றுத் துன்புறுகிறார்கள்? நீர் நினைப்பதையும் -- கற்பனை செய்வதையும், மக்கள் -- மக்கள் என்று கூறி மக்கள் தலையில் ஏன் வைக்கிறீர்? உமது சொந்த விருப்பு வெறுப்புக்களைக் காட்டிக்கொள்வதற்கு மக்கள் துணைக்கு வரவேண்டுமா?

முன்பு கவர்னர் மாளிகைக்குச் சென்றுதான் தலைகுனிந்து திரும்ப நேரிட்டுவிட்டதே -- மீண்டும் அங்கே ஏன் செல்கிறீர்? முன்பு சொன்ன அதே பதில்தான் இப்போதும் கவர்னர் உமக்குச் சொல்லி அனுப்பப்போகிறார்!

இரண்டு நாளைக்கு முன்னால் கவர்னரிடம் மகஜர் கொடுக்க உமக்கு நம்பிக்கை இல்லை; இப்போது எப்படி அவர்மீது உமக்கு நம்பிக்கை பிறந்தது? குடியரசுத் தலைவரிடம் குட்டுப்பட்டுத் திரும்பியதன் எதிரொலியா?

'என்னிடம் எந்த மகஜர் வந்தாலும் முதலமைச்சருக்கு அனுப்பித்தான் விவரம் கேட்க வேண்டும்' என்று முன்பு சொன்ன அதே பதில்தானே இப்போதும் கவர்னர் மாளிகையில் கிடைக்கப் போகிறது?

'இந்த முறை மகஜர் கொடுக்கப்போவதில்லை -- வாயால் சொல்லப் போகிறேன்' என்று நீர் சொல்வீரானால், கவர்னரும் வாயால் தமது பதிலைச் சொல்லியனுப்பப் போகிறார் -- இதுதானே நடக்கும்?

'அன்று என்மீது நம்பிக்கை இல்லை; இன்று நம்பிக்கை வந்துவிட்டதா?' என்று கவர்னர் நேரடியாகக் கேட்கமாட்டார்; அவர் மிகவும் பெருந்தன்மை வாய்ந்தவர்; என்றாலும், மனத்துக்குள்ளாவது நினைத்துக்கொள்ளமாட்டாரா?

வேண்டாத காரியங்களிலெல்லாம் ஈடுபட்டு -- வேளைக்கொரு அறிக்கையை விட்டு -- மக்களைக் கலகத்துக்குத் தூண்டுவதுதான் மக்கள் திலகத்துக்கு அழகா?

உமது பேச்சையும் செயலையும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருப்பவர்களும் மக்கள்தான்!

'மக்கள் எழுச்சி -- புரட்சி' என்பதெல்லாம், உள்ளபடியே கொடுங்கோல் ஆட்சி நடக்கும் நாடுகளில், கொடுமை தாங்காமல் மக்கள் தாங்களே கிளர்ந்து எழுவதால் ஏற்படுவதாகும்.

இங்கே நடப்பது மக்களாட்சி -- பேரறிஞர் அண்ணா அமைத்த அரசு -- அவர் வழியில் நடைபெறும் அரசு! இங்கே மக்கள் எழுச்சிக்கும் -- புரட்சிக்கும் வேலையே இல்லை!

இப்படி அமைதியாக இருக்கக் கூடாது என்பதற்காகத்தான், நீர், மக்களைத் தூண்டிவிட்டு கலகம் விளைவிக்கப்பார்க்கிறீர்! அதற்கு, 'மக்கள் எழுச்சி -- புரட்சி' என்று பெயர் கொடுக்கப்பார்க்கிறீர்!

நீர் புரட்சி நடிகராக இருந்தபோது சினிமாவில் செய்யவேண்டிய காரியத்தையும் -- பேசவேண்டிய வசனத்தையும் அரசியலுக்குப் பயன்படுத்த வேண்டாம்!

இப்படிச் செய்தால்தான் 'புரட்சித் தலைவர்' என்ற தற்காலிகப் பட்டம் நிலைக்கும் என்று கருதுவீரானால் செய்துபாரும்!

மக்கள் -- மக்கள் என்று நீர் சொல்லும் அதே மக்கள் உமக்குச் சரியான பாடத்தைக் கற்பிப்பார்கள்!

வீண் புரளிகளைக் கிளப்பிவிட்ட மக்களைக் கலகத்துக்குத் தூண்டுவதுதான் மக்கள் திலகத்துக்கு அழ[illegible]

அண்ணாவையும் மிஞ்சிய 'அறிவுலக மேதை'யே-- நடக்கட்டும் உமது திருவிளையாடல்

'உன்னைத்தான் தம்பி' என்று பாசத்தோடு அழைத்து, 'உங்களையெல்லாம் நான் கூட்டிப் பார்த்தால் நான் -- நான் தனியாக இல்லை' என்றார் அண்ணா; ஆனால் நீங்களோ 'நானே கழகம்' என்றீர்கள்; அவரைவிட நீங்கள் பெரிய தலைவர்தான்!

தம்பி வா -- தலைமை தாங்க வா; உனது ஆணைக்கு கட்டுப்பட்டு நடக்கிறேன்' என்றார் அண்ணா; 'எந்தத் தலைவர் பின்னாலும் போகமாட்டேன்' என்றீர்கள் நீங்கள்; அண்ணாவைவிடப் பெரிய மேதை தாங்கள்தான்!

அறிஞர் அண்ணா அவர்கள் தமது பொதுவாழ்வில் எத்தனையோ சிறுமைகளையும் வாய் திறந்து கூறாது பொறுமையுடன் இருந்தார்கள்; ஆனால், 'எனக்குக் கேவலம் உண்டாக்குவதா' என்று நீங்கள் கொதித்தெழுந்தீர்கள்; இதற்காக, அவர் அமைத்த கழகத்தையே -- கழக அரசையே 'அழிக்காமல் விடமாட்டேன்' என்று ஆர்ப்பரிக்கிறீர்கள்! ஆகவே, அண்ணாவைவிட மிகவும் ரோசமுள்ளவர் என்பதைத்தானே வெளிப்படையாகக் காட்டிக்கொள்கிறீர்கள்!

அறிஞர் அண்ணா அவர்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பொருளாதாரத் துறையில் அல்லலுற்றபோது அவர் துயர் தீர்க்க ரூ 40,000 திரட்டிக் கொடுத்தார்; அதற்குப் பிறகு புரட்சிக் கவிஞர் பொதுமேடைகளில் அண்ணா அவர்களைத் தூற்றியபோதுகூடத் தாம் பணம் சேர்த்துக் கொடுத்ததுபற்றி ஒரு வார்த்தை கூறியது கிடையாது; ஆனால் நீங்களோ, 'அண்ணா அவர்கள் மருத்துவ உதவிக்கு என்னைப் பணம் கேட்டார்' என்று அவர் பிறந்த காஞ்சியிலேயே கூறியிருக்கிறீர்கள்!

"வரலாற்றில் இடம் பெறும்படியான வள்ளலாகும் தகுதி, அண்ணாவைவிட எனக்குத்தான் உண்டு" என்று நீங்கள் பறைசாற்றிக் கொள்ளலாம்!

'அண்ணா அவர்கள் ஏராளமான பேச்சாளர்களை -- எழுத்தாளர்களை உருவாக்கினார்; அதற்கேற்ப, பொதுவாழ்க்கையில் தன்னை ஒழுங்குபடுத்திக் கொண்டார்!

தம்பிமார்களையும் பேசச் சொல்லி -- அதைக் கேட்டு மகிழ்ந்து -- இறுதியில் அவர்களைப் பாராட்டும் பண்பு படைத்தவர் நமது அண்ணா!

"நான் போனால் யாரையும் பேசவிடமாட்டார்கள்; என்னைத்தான் மக்கள் மதித்தார்கள்" என்று சொல்கிறீர்கள் நீங்கள்! அவரைவிட நீங்கள் நல்ல பண்பாளர்தான்!

தி. மு. கழகத்தை அண்ணா அவர்கள் உருவாக்கியபோது, கட்சிக்கான சட்ட திட்டங்களை உருவாக்கி -- கொள்கைகளை வரையறுத்துக் கொண்ட பிறகுதான், கட்சிக்கான நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அறிவித்தார்; ஆனால் தாங்களோ, கட்சி உருவானதும் அகப்பட்ட அத்தனை பேருக்கும் உடனடியாகப் பதவி கொடுத்துவிட்டு, கொள்கைகளைப் பற்றியோ -- சட்ட திட்ட விதிகளைப் பற்றியோ கவலைப்படாமல் இருக்கிறீர்கள்! ஆகவே, நீங்கள் அண்ணா அவர்களைவிடப் பெரிய இராஜதந்திரி என்றே சொல்லலாம்!

அறிஞர் அண்ணா அவர்கள் அறிவுக்கு -- ஆற்றலுக்கு சில இலட்சம் பேர் அவர் துவக்கிய கழகத்தில் சேர்ந்தார்கள்; ஆனால் உங்கள் அறிவுக்கு -- ஆற்றலுக்கு 16 இலட்சம் பேர் சேர்ந்திருப்பதாகச் சொல்கிறீர்கள்; அவரைவிட நீங்கள் பேரறிஞர்தான்!

அண்ணாவின் தம்பிமார்கள் மதுவிலக்கைக் கைவிட்டுவிட்டதாகக் கூறுகிறீர்கள்; உங்களது தம்பிமார்கள் 16 இலட்சம் பேர்களையாவது குடிக்காமல் செய்துவிட்டால் உண்மையிலேயே நீங்கள் அண்ணாவைவிடப் பெரியவர்தான்!

துவக்கிய புதிய கட்சிக்கு மட்டுமல்ல -- அகில உலகத்திற்கும் நீங்களே மாபெரும் தலைவராகும் தகுதி பெறுகிறீர்கள்! செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்."

--- டி. கே. சீனிவாசன் எம்.பி.

ஒரிசாவில் நடைபெற்ற ஒழுங்கீனங்கள்

விரைவில் விசாரணை குழு அமைக்க அரசு முடிவு

புவனேசுவர், நவ. 8—

"ஒரிசா மாநிலத்தில், ஒரிசா-ஜன காங்கிரசுக் கூட்டணி ஆட்சியின்போதும், சுதந்தரா -- உத்கல் காங்கிரசு ஆட்சியின்போதும் பீடி இலை வர்த்தகத்தில் நடந்ததாகக் கூறப்படும் 'ஊழல்கள்' பற்றி விசாரணை நடத்த ஒரிசா அரசு விரைவில் ஒரு கமிஷனை அமைக்கும்"

என்று, மாநில நிதியமைச்சர் பங்க பெகாரி தாஸ் அறிவித்தார்.

"அட்வகேட்-ஜெனரல் கங்காதர் ராத் அளித்த அறிக்கையின் அடிப்படையில் விசாரணைக் கமிஷனை அமைப்பதென்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது; இரு கூட்டணிகளின் ஆட்சிக் காலங்களில் பல்வேறு 'ஒழுங்கீனங்கள்' நடந்துள்ளன என்பதற்கு ஆதாரம் இருப்பதாக அறிக்கை தெரிவிக்கிறது."

என்று அவர், இங்கு செய்தியாளரிடை தெரிவித்தார்.

அறிக்கையின் சுருக்கப் பட்டியலை வெளியிட்ட அமைச்சர் 'பீடி இலை வர்த்தக விதிகள் வேண்டுமென்றே தவறாக வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றன; சம்பந்தப்பட்ட அமைச்சர், வர்த்தகர்களுக்குத் தனிப்பட்ட முறையில் காண்டிராக்ட் உத்தரவுகளைக் கொடுத்துள்ளதாகத் தெரிய வந்திருக்கிறது' என்றும் தெரிவித்தார்.

டெண்டர் அடிப்படையில் பீடி இலை வர்த்தகம் வியாபாரிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று தலைமை நீதிமன்றம் தெரிவித்திருந்தபோதிலும், 1971-ம் ஆண்டில் இருந்த மாநில அரசு அந்தக் கொள்கையை மீறியது என்றும் அட்வகேட்-ஜெனரலுக்குத் தெரியவந்திருக்கிறது.

பீடி இலை வாங்கும் சில தொழிற்சாலைகளுக்கு 20 சதவிகிதம் 'ரிபேட்' அளிக்கும் பிரேரணைக்கு 1970-ல் முதலமைச்சராக இருந்த ஆர். என். சிங் தேவ் அனுமதியளித்தார் என்றும், இதனால் மாநில அரசின் வருமானம் ரூ. 43.33 இலட்சம் அளவிற்கு இழப்பு ஏற்பட்டது என்றும் அறிக்கையில் தெரிவி[illegible]பட்டிருக்கிறது

பேரறிஞர் அண்ணா உருவச் சிலையின் முன்

ஒரு தாய் உள்ளத்தின் கதறல்

கோயிலுக்கு நாங்கள் போக வேண்டுமாம்

'புரட்சி நடிகர்' கூறுகிறார் அண்ணா

உங்கள் இதயத்தில் குடியிருந்தவரா அண்ணா இந்தத் துரோகி?

"பத்தாம் தேதி, கடவுள் நம்பிக்கை உள்ள தாய்மார்கள் கோயில்களுக்கும், மற்ற தாய்மார்கள் அண்ணா அல்லது திருவள்ளுவர் சிலைக்கும் சென்று பிரார்த்தனை நடத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் எம். ஜி. ஆர்."

—செய்தி

நல்லவேளை — கட்டளையிடாமல்போய்விட்டீரே! உங்களுக்குத்தான் வேறு வேலை இல்லை — எங்களுக்குமா வேலை இல்லை? நீங்கள் தினம் ஒன்றைச் சொல்லிக்கொண்டிருப்பீர் — அதை நாங்களெல்லாம் கேட்டுக்கொண்டு ஆடவேண்டுமா?

ஏதோ, சினிமாவில் எம். ஜி. ஆர். நல்லவனாக நடிக்கிறாரே — அந்தச் சினிமாவைப் பார்த்தால் நமது பிள்ளைகுட்டிகளும் நல்லவர்களாக ஆவார்களே' என்றுதான் எங்களுடைய குழந்தை குட்டிகளுடன் உங்கள் படத்தைப் பார்க்கத் தொடங்கினோம்; உங்கள் படத்துக்கு பெண்கள் கூட்டம் அதிகமாக வருவதைப் பார்த்ததும், 'ஓஹோ — தாய்மார்களெல்லாம் நம்ம பக்கம்தான் போலிருக்கிறது' என்று கருதித் தப்புக் கணக்குப் போட்டுவிட்டீர்!

சினிமா நடிகர் என்றால் கூட்டம் வரும்தான்; அதிலும் பெண் கூட்டம் அதிகமாகத்தான் இருக்கும்; இதை வைத்துக்கொண்டு, 'தாய்மார்களெல்லாம் தி. மு. க. ஆட்சிக்கு எதிராகப் பிரார்த்தனை நடத்தவேண்டும்' என்று கூறுவீரானால், நிச்சயம் ஏமாந்துதான் போவீர்!

தமிழ்நாட்டுத் தாய்மார்கள், அண்ணா அமைத்த அரசுக்கும் — கட்சிக்கும் எதிராக என்றும் நடக்கமாட்டார்கள்!

உமது அறிக்கையில் இன்னொரு சூட்சமமும் இருப்பது புரிகிறது; அதாவது, 'உண்மையான தி. மு. கழகத்தைச் சேர்ந்த குடும்பத்தவர் பெரும்பாலும் பகுத்தறிவாதிகளாகத்தான் இருப்பார்கள்; அவர்கள் எப்போதுமே நம்மை ஆதரிக்கமாட்டார்கள்; அவர்களை அழைத்துப் பயனில்லை; வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் நம்மை இப்போது ஆதரிப்பவர்கள்; அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கையைப் பற்றிச் சொன்னால் திருப்தியடைவார்கள்' என்று கருதி இந்த வேண்டுகோளை நீர் விடுத்திருக்கிறீர் என்பது தெரிகிறது; அவர்களும் ஊர்வலத்துக்கு வருவார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இல்லை; அதனால்தான், 'தாய்மார்களே — ஊர்வலத்துக்கு வரவேண்டாம்' என்று கௌரவமாக அறிவித்திருக்கிறீர்!

தாய்மார்களும் கலந்துகொள்ள வேண்டும் என்றுதான் வேண்டுகோள் விடுத்துப் பாருங்களேன் — அப்போது உமக்கு அவர்களிடத்திலே இருக்கும் ஆதரவின் இலட்சணம் புரிந்துவிடும்!

'தாய்மார்கள் ஊர்வலத்துக்கு வரவேண்டாம்' என்று அறிவித்துவிட்டு, 'மாணவர்கள் கட்டாயம் வரவேண்டும்' என்று அழைத்திருக்கிறீர் — இதுதான் அரசியலா? இதுதான் அண்ணா வழி நடக்கும் அழகா?

இளைஞர்களின் பண்பையும் — மாணவர்களின் படிப்பையும் இதுவரை கெடுத்துக் குட்டிச்சுவராக்கியது போதாதா?

உங்கள் பேச்சைக் கேட்டுவிட்டு—உணர்ச்சி வயப்பட்டு, [illegible] —அர்த்தால் என்று அவர்கள் கிளம்பி—அதனால் கலகம் [illegible]டு— அமைதியை நிலைநாட்டத் தடியடி, துப்பாக்கிச் சூடு எல்லாம் நடந்து—அதன்மூலம் பத்து இருபது மாணவர்களாவது சாக— அந்தப் பிணங்களைத் தூக்கிவைத்துக்கொண்டு ஒப்பாரி வைக்கலாம்—அரசியல் நடத்தலாம் என்று பார்க்கிறீர்!

நாங்கள் கோயிலுக்குப் போகத் தேவையில்லை — பிரார்த்தனையும் நடத்த வேண்டியதில்லை; எங்களுக்குக் குடும்பம் — பிள்ளைக்குட்டி — பிழைப்பு எல்லாம் இருக்கின்றன; உங்களைப்போல் இலட்சக் கணக்கில் பணத்தைச் சேர்த்து வைத்துக்கொண்டு அரசியல் வியாபாரம் நடத்தக்கூடியவர்கள் அல்லர் நாங்கள்!

வேண்டுமானால் — அண்ணா சிலைக்கு முன் சென்று நின்று, நீங்கள் பண்ணும் அட்டகாசம் பற்றி முறையிடுவோம் — 'அண்ணா அவர்களே — பார்த்தீர்களா இந்தத் துரோகியை; உங்களால் வளர்ந்து பேரும் புகழும் — பணமும் சேர்த்துக்கொண்ட இந்தப் பாவி, நீங்கள் உருவாக்கிய கழகத்தையே எதிரிகளுடன் கூடிக்கொண்டு அழிக்க முனைந்திருக்கிறார்; நீங்கள் அமைத்த ஆட்சியையே ஒழிக்கச் சதி செய்திருக்கிறார்; இந்தத் துரோகச் சதிக்கு உங்கள் புனிதமான பெயரையும், உருவப் படத்தையும் வேறு பயன்படுத்திக் கொள்கிறார்; இவர்தான் உங்களுடைய உண்மையான — நம்பிக்கைக்கு உரிய 'தம்பி'யாம்; கேட்க மனம் கொதிக்கிறது அண்ணா — கொதிக்கிறது!

இவரையா நீங்கள் உங்கள் தம்பியாக ஏற்று வைத்திருந்தீர்கள்? எப்படி அண்ணா இவருக்கு உங்கள் இதயத்தில் இட[ம்] கொடுத்திருந்தீர்கள்? உங்கள் பெயருக்கே களங்கம் [ஏ]ற்படுத்தும் பணியில்தான் அண்ணா — இந்த மனிதர் ஈடுப[ட்]டிருக்கிறார்; எதையும் காதில் போட்டுக்கொள்ளாமல் நீங்க[ள் நீ]ண்ட உறக்கத்தில் ஆழ்ந்திருக்கிறீர்கள்; நாங்கள் யா[ரிடம் செ]ன்று முறையிடுவோம்?—இப்படித்தான் எங்கள் முறையீ[டு] இருக்குமே தவிர, நீங்கள் சொல்லுவதுபோல் இந்த ஆட்சிக்கு எதிராக நிச்சயம் இருக்காது என்பதை அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன்."

— ஒரு தாயின் மனக் குமுறல்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

11--11--72

கோபி

நகர தி மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பெரியார் திடலில்; தலைவர்: ஜி ஆர். பழனியப்பன்; பேசுவோர்: மு. இராமநாதன் எம்.எல்.சி., ஜி. என். இராசு எம்.எல்.சி., பி. ஏ. சாமிநாதன் எம்.பி., டாக்டர் எஸ். எம். பழனியப்பன், கே. எஸ். ஆனந்தன், வி. வி. வெங்கடாசலம், பி. கே. பழனியப்பன், ஜி. பி. வெங்கிடு எம்.சி., ஜி. கே. சின்னுசாமி ஜி. எஸ். அருணாசலம், தமிழரசு.

திருச்சி மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம்

திருச்சி மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம், 10—11—72 மாலை 4 மணியளவில் திருச்சி முனிசிபல் சத்திரத்தில் — அவைத் தலைவர் ஜி. பராங்குசம் எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்; வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களும் கலந்துகொள்வார்; மாவட்டப் பிரதிநிதிகள் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் கேட்டுக்கொள்கிறார்.

மீண்டும் நிக்சனே அமெரிக்க அதிபர்

அரசியல் வரலாற்றில் புதிய சாதனை

வாஷிங்டன், நவ. 9— குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ரிச்சர்டு நிக்சன், இரண்டாவது தடவையாக அமெரிக்கக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; அவருக்கு 4,48,86,259 வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சனநாயகக் [கட்]சி வேட்பாளர் மக்கவ[ர்]னுக்கு 2,79,60,532 வாக்குகளும் கிடைத்தன.

அமெரிக்காவின் தேர்தல் வரலாற்றில் இவ்வளவு வாக்கு வித்தியாசத்தில் இதற்குமுன் எவரும் வெற்றி பெற்றதில்லை; அதேபோன்று சனநாயகக் கட்சி வேட்பாளர் எவரும் இப்படிப் படுதோல்வியடைந்ததும் கிடையாது.

தேர்தல் பிரச்சாரச் செலவை எடுத்துக் கொண்டாலும், இந்த ஆண்டுத் தேர்தல் புதிய வரலாற்றைப் படைத்திருக்கிறது; இரண்டு கட்சிகளும் தேர்தல் பிரச்சாரத்துக்குச் செலவிட்ட தொகை ரூ. 300 கோடியாகும்.

அமெரிக்காவில் 50 மாநிலங்கள் இருக்கின்றன; அதில் 49 மாநிலங்களில் நிக்சனுக்குத்தான் பெரும்பான்மை கிடைத்திருக்கிறது.

ஒரே ஒரு மாநிலத்தில் — பெரும்பாலும் நீக்ரோ மக்கள் வாழும் மாநிலத்தில்தான் மக்கவர்னுக்கு அதிக வாக்குகள் கிடைத்தன.

இந்தத் தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 8 கோடியாகும்.

முதல்தடவையாக இந்தத் தேர்தலில், 18-21 வயது இளைஞர்கள் வாக்கு அளித்தனர்.

59 வயதான நிக்சன்; இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு (1976-ம் ஆண்டு முடிய) பதவி வகிப்பார்,

துணைக்குடியரசுத் தலைவர்

துணைக் குடியரசுத் தேர்தலிலும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த அக்னூவ் வெற்றிபெற்றார்; சனநாயகக் கட்சி வேட்பாளர் சில்வர் தோல்வியடைந்தார்.

அமெரிக்கத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சி பெரும் வெற்றி பெற்றிருந்த போதிலும், செனட் சபையில் அக்கட்சிக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை; சனநாயகக் கட்சிதான் பெரும்பான்மை இடத்தைப் பெற்றிருக்கிறது.

ஒரு தந்தை உள்ளம் பேசுகிறது

மாணவர்களையா அழைக்கிறீர்?

"உயர்நிலைப் பள்ளி முதல் கல்லூரி வரை உள்ள எல்லா மாணவர்களும் ஊர்வலத்தில் கலந்துகொள்ள வேண்டும்."

— புதுக் கட்சித் தலைவர் அறிக்கை

பள்ளித் தலைமையாசிரியரோ — கல்லூரி முதல்வரோ உத்தரவு போடுவதுபோலல்லவா இருக்கிறது? கலந்துகொண்டுதான் ஆகவேண்டுமா? இல்லையென்றால்...?

கலந்துகொள்ளாத மாணவர்களை உமது ஆட்கள் கவனித்துக் கொள்வார்கள் — இதுதானே நடக்கப்போகிறது?

உமது ஆட்களைக் கொண்டு நடத்தவேண்டிய வன்செயல்களையெல்லாம் நடத்திவிட்டு, 'எல்லாம் மாணவர்கள்தான் செய்தார்கள்' என்று அவர்கள்மீது பழியைப்போடத்தானே மாணவர்களை அழைக்கிறீர்?

நீர் பொறுப்புள்ள ஓர் அரசியல் வாதியாக இருந்தால் மாணவர்களை அழைப்பீரா?

பெற்றவர்களுக்கல்லவா பிள்ளைகளின் அருமை பெருமை தெரியும் — உமக்கென்ன — கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பதுபோல் — கிடைக்கிற ஆயுதத்தை வைத்துக்கொண்டு இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்று நினைக்கிறீர்!

பெற்றோர்கள் பட்டியலில்தான் சேராதவர் நீர்—மாணவராக வாவது இருந்ததுண்டா — அதுவுமில்லை!

வேண்டாமய்யா உமக்கு இந்த விபரீத புத்தி! வேறு ஏதேனும் உருப்படியான காரியங்களுக்கு அழைப்புவிடும்; மாணவர்கள் மட்டுமல்ல — எங்களைப் போன்ற பெற்றோர்களும் வரத் தயாராயிருக்கிறோம்.

உமது அரசியல் இலாப வேட்டைக்கு எங்கள் வீட்டுப் பிள்ளைகளையெல்லாம் அனுப்பிவைத்து ஆகவேண்டுமா? உயர்நிலைப் பள்ளி — கல்லூரி மாணவர்கள் மட்டும்தானா? ஆரம்பப் பள்ளி மாணவர்களை ஏன் விட்டுவிட்டீர்; அவர்களுக்கும் மிட்டாய் வாங்கிக் கொடுத்தால் உமக்கு 'ஜே' போட்டுக்கொண்டு வருவார்களே! அவர்களிடம் சாக்கட்டியும் — சாக்லெட்டும் வாங்கிக் கொடுத்துதானே வழியில் வருகிற போகிற வண்டிகளிலெல்லாம் எழுதச்செய்தது உமது கூட்டம் — அது போதாதா?

விவரமறியாத விளையாட்டுப் பிள்ளைகளைத் தூண்டிவிட்டு அரசியல் விளையாட்டு நடத்த முனைந்துள்ள விளையாட்டு அரசியல் வாதியே—உமது விளையாட்டுகளெல்லாம் சினிமாவில்தான் எடுக்கும் — நாட்டில் நடவாது!

பத்தாம் தேதி வரட்டும் — நாடு உமக்குப் புத்தி புகட்டட்டும்!

இப்படிக்கு
ஒரு தந்தை

புளுகர் திலகத்தின் 'டில்லிப் புளுகு'!

டில்லி செய்தியாளர்:—"சென்னையில் தாங்கள் பேசிய அக்டோபர் 8-ந் தேதிக்கு முன்னால் தங்களுக்கு ஊழலைப் பற்றி ஏதும் தெரியாதா? கடந்த ஆகஸ்டு 5-ந் தேதியிலிருந்து 7-ந் தேதி வரை மதுரையில் நடைபெற்ற தி. மு. கழக மாநாட்டில் பேசும் போது, 'கழக அமைச்சர்கள் இலஞ்சம் வாங்கவில்லை' என்று தாங்கள் மக்களிடம் கூறவில்லையா? இந்தக் குறுகிய இரண்டே மாதங்களில் கழக அமைச்சர்கள் ஊழல் பேர்வழிகள் ஆகிவிட்டார்கள் என்று தாங்கள் நினைக்கிறீர்களா?"

எம். ஜி. ஆர்.:—"என் கட்சிக்காரர்களிடம் கடந்த சில காலமாகவே மக்கள் மத்தியில் அவநம்பிக்கை வளர்ந்து வருவதுபற்றி எச்சரித்து வந்தேன்; இதை யாரும் மறுக்க முடியாது; பிப்ரவரி மாதத்திலேயே கோவை மாநாட்டில் மக்கள் மனதில் உள்ள சந்தேகங்களைப் போக்க வேண்டுமென்று என் கட்சிக்காரர்களிடம் கூறினேன்; 'கழக அமைச்சர்கள் ஊழல்காரர்களா' என்று மதுரை மாநாட்டில் மக்களிடமிருந்து கேட்டறிய முயன்றேன்; மக்கள் மௌனமாக இருந்தார்கள்; 'என் (எம். ஜி. ஆர்.) போன்றோரை தவறான வழியில் பணம் சம்பாதித்ததாக எண்ணுகிறீர்களா' என்று கேட்டேன்; மக்கள், 'இல்லை' என்று பதிலளித்தார்கள்; ஆக, இதுவே மக்கள் பதவியில் இருந்தவர்கள் மீது சந்தேகப்பட்டார்கள் என்பதற்கும் போதிய சான்றாகும்."

— புதுடில்லிச் செய்தி (6-11-72)

'இராசபாளையத்தில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில் நான் தாய்மார்களிடம், நீங்கள் யாருக்காக ஓட்டுப் போட்டீர்கள்' என்று கேட்டேன்; அதேபோல் இங்கும் தாய்மார்களை இப்போது நான் கேட்கிறேன்; நானோ முதலமைச்சரோ — இதர அமைச்சர்களோ இலஞ்சம் வாங்கினார்கள் என்று கூறுகிறார்களே — இது சரியா, இல்லையா என்று நீங்கள் பதில் கூறவேண்டும்; நீங்கள் இலஞ்சம் வாங்கினீர்கள்' என்றால் மௌனமாக இருங்கள்; 'இல்லை' என்றால், 'இல்லை' என்று கூறுங்கள் என்று தாய்மார்களைக் கேட்டுக் கொள்கிறேன்' என்று எம் ஜி. ஆர். கூறினார்.

"இந்த அமைச்சர்கள் இலஞ்சம் வாங்கினார்களா?" என்று எம். ஜி. ஆர். கேட்டார்; உடனே பெண்கள், 'இல்லை, இல்லை' என்று கூறினார்கள்."

— காஞ்சிபுரம் மாநாட்டு நிகழ்ச்சியைப்பற்றி, 'அலை ஓசை' (10-4-72)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம் பி. அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.